## பொதுத்தமிழ் மாதிரித்தேர்வு - 10

1. சரியானவற்றைக் காண்க

1. யான் + கு = எனக்கு

2. யான் + கண் = என்னின்கண்

3. யான் + அது = என்னது

4. யான் + ஆல் = என்னால்

(A) 2, 3 – சரி (B) 1, 2 – சரி

(C) 1, 4 – சரி (D) நான்கும் சரி

Ans - (C) 1, 4 – சரி

2. பொருந்தாத ஒன்றைத் தெரிவு செய்க.

தொழிற்பெயர்

(A) காலங்காட்டாது (B) மூவிடங்களிலும் வரும்

(C) தொழிலுக்குப் பெயராய் வரும் (D) இருவகைப்படும்

Ans - (B) மூவிடங்களிலும் வரும்

3. கொடுக்கப்பட்டுள்ள சொல்லுக்குரிய சரியான பொருள் எது?

'கவிகை'

(A) தேவருலகம் (B) கவிதை

(C) பாட்டு (D) குடை

Ans - (D) குடை

4. கொடுக்கப்பட்ட சொற்களுள் சரியான மரபுச் சொல்லைத் தேர்க.

(A) மான் குட்டி (B) சிங்கக் குருளை

(C) கீரிக் குட்டி (D) கழுதை கன்று

Ans - (B) சிங்கக் குருளை

5. கீழக்காணும் 'வல்லினம் மிகா இடம்' குறித்த இலக்கணக்கூற்றில் பிழையான கூற்று எது?

(A) எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது

(B) வினைத் தொகையில் வல்லினம் மிகாது

(C) இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது

(D) உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது

Ans - (B) வினைத் தொகையில் வல்லினம் மிகாது

Winmeen

6. PROJECTOR – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்தெடுக்க

(A) படப்பிடிப்பு (B) படப்பிடிப்புக் கருவி

(C) பட வீழ்த்தி (D) பார்வை நிலைப்பு

Ans - (C) பட வீழ்த்தி

7. மரபுத் தொடருக்குப் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

“ஆகாயத் தாமரை”

(A) அலைந்து திரிதல் (B) இல்லாத ஒன்று

(C) பயனின்றி இருத்தல் (D) இருப்பது போல் தோன்றும் ஆனால் இராதது

Ans - (B) இல்லாத ஒன்று

8. இலக்கணக்குறிப்பு அறிக

கெடுப்பதூஉம்

(A) இன்னிசை அளபெடை (B) இசைநிறை அளபெடை

(C) சொல்லிசை அளபெடை (D) செய்யுளிசை அளபெடை

Ans - (A) இன்னிசை அளபெடை

9. “பார்குலாம் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை”

கீழ் உள்ள விடைகளில் சரியான விடையை எழுதுக.

(A) எதுகை மட்டும் வந்துள்ளது (B) எதுகையும் இயையும் வந்துள்ளது

(C) மோனையும் எதுகையும் வந்துள்ளது (D) மோனை, எதுகை, இயைபு வந்துள்ளது.

Ans - (D) மோனை, எதுகை, இயைபு வந்துள்ளது.

10. விடைக்கேற்ற வினாவைக் கண்டறிக.

(A) திரைப்படம் எடுப்பதனைவிட எப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?

(B) திரைப்படம் எடுப்பதனைவிட எந்தப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?

(C) திரைப்டம் எடுப்பதனைவிட கடினமான பணி எது?

(D) திரைப்படம் எடுப்பதனைவிட எவ்வகைப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?

Ans - (A) திரைப்படம் எடுப்பதனைவிட எப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?

11. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

(A) கெடாஅ (B) அரங்கம்

(C) எடுப்பதூஉம் (D) தழீஇ

Ans - (B) அரங்கம்

12. பாதபீடிகை உள்ள இடம்

(A) வஞ்சிமாநகர் (B) மணிபல்லவத் தீவு

(C) ஆபுத்திரன் நாடு (D) சேர நாடு

Ans - (B) மணிபல்லவத் தீ

13. அறவண அடிகள் ‘அறிவுண்டாகுக’ என யாரை எல்லாம் வாழ்த்தினார்?

(A) அரசமாதேவி, தோழியர் கூட்டம் (B) சித்திராபதி

(C) மணிமேகலை (D) அனைவரையும்

Ans - (D) அனைவரையும்

14. ‘புல்லாகிப் **பூடாய்**’ இடம்பெற்றுள்ள நூல்

(A) திருவாசகம் (B) திருமந்திரம்

(C) தேவாரம் (D) பதிற்றுப்பத்து

Ans - (A) திருவாசகம்

15. திருக்குறளில் அறத்துப்பாலுக்குரிய அதிகாரங்கள்

(A) 70 (B) 25

(C) 38 (D) 30

Ans - (C) 38

16. முழுதும் விருத்தபாக்களால் ஆன காப்பியம்

(A) சிலப்பதிகாரம் (B) மணிமேகலை

(C) கம்ப இராமாயணம் (D) குண்டலகேசி

Ans - (C) கம்ப இராமாயணம்

17. எத்திராகலு (எ) அரங்கசாமி என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர்

(A) நா.காமராசன் (B) தாராபாரதி

(C) அப்துல் ரகுமான் (D) வாணிதாசன்

Ans - (D) வாணிதாசன்

18. தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் சிறப்பு குறித்து பாடப்பட்ட நூல் எது?

(A) மும்மணிகோவை (B) முத்தொள்ளாயிரம்

(C) மூவர் உலா (D) கலிங்கத்துப்பரணி

Ans - (B) முத்தொள்ளாயிரம்

19. மார்போலையில் எழுதும் எழுத்தாணி

(A) ஈட்டி (B) தூரிகை

(C) தந்தம் (D) ஊசி

Ans - (C) தந்தம்

20. ‘வனப்பு’ என்னும் சொல்லின் பொருள்

(A) அழகு (B) அறிவு

(C) வளமை (D) ஆளுமை

Ans - (A) அழகு

21. ‘விளம்பி’ என்பது ------------ பெயர்

(A) இயற்பெயர் (B) புனைபெயர்

(C) ஊர்ப்பெயர் (D) சொல்பெயர்

Ans - (C) ஊர்ப்பெயர்

22. விக்டோரியா மகாராணி காலையில் கண்விழித்ததும் முதலில் படித்த நூல்

(A) விவிலியம் (B) திருக்குறள்

(C) ஷேக்ஸ்பியரின் படைப்புகள் (D) கீட்சின் கவிதைகள்

Ans - (B) திருக்குறள்

23. திருவள்ளுவராண்டு எதை உறுதி செய்து கணக்கிடப்படுகிறது?

(A) கி.மு. 31 (B) கி.மு. 13

(C) கி.பி. 2 (D) கி.பி. 12

Ans - (A) கி.மு. 31

24. ‘சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன் சாத்திரக் குப்பையும் தணந்தேன்’ – எனப் பாடியவர்

(A) திருமூலர் (B) பெரியார்

(C) வள்ளுவர் (D) வள்ளலார்

Ans - (D) வள்ளலார்

25. ‘அரியா சனமுனக்கே யானால் உனக்குச் சரியாகும் உண்டோ தமிழே?” இடம்பெற்ற நூல்

(A) தென்றல் விடு தூது (B) நெஞ்சு விடு தூது

(C) தமிழ் விடு தூது (D) புகையிலை விடு தூது

Ans - (C) தமிழ் விடு தூது

26. ‘கண் வனப்புக் கண்ணோட்டம்.

கால் வனப்புச் செல்லாமை’ – என உறுப்பழகு பாடியவர்

(A) பரணர் (B) கபிலர்

(C) காரியாசான் (D) முடியரசன்

Ans - (C) காரியாசான்

27. ‘பராய்க்கடன் உரைத்தல்’ என்பது

(A) கடன் கேட்டல்

(B) கடன் கொடுத்தல்

(C) வேண்டியது நிறைவேறினால் இன்னது தருவேன் எனல்

(D) வாங்கிய கடனைத் தர மறுத்தல்

Ans - (C) வேண்டியது நிறைவேறினால் இன்னது தருவேன் எனல்

28. கோவலன், கண்ணகி மதுரையில் யாரிடம் அடைக்கலப்படுத்தப்பட்டனர்?

(A) கவுந்தியடிகள்

(B) மாதரி

(B) மாதவி

(D) நெடுஞ்செழியன்

Ans - (B) மாதரி

29. ‘Charity begins at home” என்பதற்கு இணையான தமிழ்ப்பழமொழி

(A) தன்கையே தனக்குதவி

(B) அறநிலையம் வீட்டிலேயே துவக்கம்

(C) தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்

(D) வீட்டிலேயே தானம் செய்.

Ans - (C) தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்

30. அகப்புறப்பாடல்களைக் கொண்ட சங்க நூல் எது?

(A) பதிற்றுப்பத்து

(B) பரிபாடல்

(C) புறநானூ

(D) அகநானூறு

Ans - (B) பரிபாடல்

31. நான்மணிக்கடிகையைப் பாடியவர் யார்?

(A) விளம்பி நாகனார்

(B) கபிலர்

(C) முன்றுறை அரையனார்

(D) கடுவெளிச் சித்தர்

Ans - (A) விளம்பி நாகனார்

32. திருவாரூர் நான்மணி மாலையைப் பாடியவர்

(A) திருமூலர்

(B) குமரகுருபரர்

(C) சிவபெருமான்

(D) திருஞானசம்பந்தர்

Ans - (B) குமரகுருபரர்

33. “யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்” என்று கம்பரைப் புகழ்ந்து பாடியவர்?

**(A) பாரதி**யார்

(B) பாரதிதாசன்

(C) புகழேந்தி

(D) சடைப்பவள்ளல்

Ans - **(A) பாரதி**யார்

34. குறுந்தொகையின் அடிவரையறை

(A) 8 – 16 (B) 13 – 31

(C) 4 – 8 (D) 9 – 12

Ans - (C) 4 – 8

35. சரியான விடையை தேர்வு செய்

| சொல் | பொருள் |
|---|---|
| (a) விசும்பு | 1. தந்தம் |
| (b) துலை | 2. யானை |
| (c) மருப்பு | 3. துலாக்கோல் |
| (d) களிறு | 4. வானம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

Ans - (B) 4 3 1 2

36. கலித்தொகை ---------------- நூல்களில் ஒன்று

(A) பத்துப்பாட்டு (B) எட்டுத்தொகை

(C) பதினெண்கீழ்க்கணக்கு (D) பதினெண்மேல்கணக்கு

Ans - (B) எட்டுத்தொகை

37. சரியானவற்றை தேர்ந்தெடுத்து எழுதுக.

கலம்பகம் -------------- வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று

(A) தொண்ணூற்றாறு (B) பதினெட்டு

(C) பத்து (D) தொண்ணூற்றொன்புத

Ans - (A) தொண்ணூற்றாறு

38. பெருமாள் திருமொழியில் -------------- பாசுரங்கள் உள்ளன.

(A) இருநூற்றைந்து (B) நூற்றைந்து

(C) நூறு (C) பதினெட்டு

Ans - (B) நூற்றைந்து

39. உ.வே.சாவின் தமிழ்ப்பணியைப் பாராட்டிய மேலைநாட்டவர்

(A) கோலரிட்ஜ் (B) வோர்ட்ஸ்வொர்த்

(C) கீட்ஸ் (D) சூலியல் வின்சோன்

Ans - (D) சூலியல் வின்சோன்

40. உடற்பிணியைப் போக்கும் மருத்துவ நூல்கள் இயற்றிய சித்தர்கள்

1. அகத்தியர்
2. தேரையர்
3. போகர்
4. புலிப்பாணி

(A) 1, 4 – சரி (B) 1,3,4 – சரி

(C) 2, 4 – சரி (D) 1,2,3,4 – சரி

Ans - (D) 1,2,3,4 – சரி

41. பெரியார் இருகண்களாகக் கருதியவை

(A) அன்பு, ஈகை (B) மரியாதை, சுயமரியாதை

(C) வாய்மை, தூய்மை (D) ஈகை, வாய்மை

Ans - (B) மரியாதை, சுயமரியாதை

42. ‘பிருங்கராசம்’, ‘தேகராசம்’ – எந்த மூலிகையின் வேறு பெயர்கள்

(A) குப்பைமேனி (B) கரிசலாங்கண்ணி

(C) கறிவேப்பிலை (D) கற்றாழை

Ans - (B) கரிசலாங்கண்ணி

43. குரல்வளத்தை மேம்படுத்தும் மூலிகை

(A) தூதுவளை (B) ஞானப்பச்சிலை

(C) குப்பைமேனி (D) கற்றாழை

Ans - (B) ஞானப்பச்சிலை

44. மீதூண் விரும்பேல்” என்றவர்

(A) கம்பர் (B) ஔவையார்

(C) வள்ளுவர் (D) திருமூலர்

Ans - (B) ஔவையார்

45. ‘சித்திரக்காரப்புலி’ என்றழைக்கப்பட்டவர்

(A) மகேந்திரவர்மன் (B) நந்திவாமன்

(C) கோப்பெருஞ்சோழன் (D) குலோத்துங்கன்

Ans - (A) மகேந்திரவர்மன்

46. ‘தேவாரம்’ என்பது

(A) இக்காலத்து இசைத்தமிழ் நூல்
(B) இடைக்காலத்து இசைத்தமிழ் நூல்
(C) முற்காலத்து இசைத்தமிழ் நூல்
(D) சங்கக்காலத்து இசைத்தமிழ் நூல்

Ans - (B) இடைக்காலத்து இசைத்தமிழ் நூல்

47. உரிய விடையை எழுதுக.

முத்துவீரப்பன் ஆட்சிக்காலம்

(A) நான்காண்டு
(B) ஐந்தாண்டு
(C) ஏழாண்டு
(D) ஆறாண்டு

Ans - (C) ஏழாண்டு

48. பொருத்தமான விடையை எழுதுக

‘நாடகத்தமிழ்’

(A) இயற்றமிழில் பிறந்தது
(B) இயல் இசை சேர்ந்த வழியே பிறந்தது
(C) இசைத்தமிழில் பிறந்தது
(D) எதுவுமில்லை

Ans - (B) இயல் இசை சேர்ந்த வழியே பிறந்தது

49. “எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவது சமத்துவம்” என்றவர்

(A) பெரியார்
(B) அண்ணல் அம்பேத்கர்
(C) காந்தியடிகள்
(D) திரு.வி.க

Ans - (B) அண்ணல் அம்பேத்கர்

50. எண்பது விழுக்காடு திராவிட மொழிக்கூறுகளை கொண்ட நூல்

(A) மலையாளம்
(B) தமிழ்
(C) தெலுங்கு
(D) கன்னடம்

Ans - (B) தமிழ்

51. “பசுவும் கன்றும் தோட்டத்தில் மேய்ந்து கொண்டியிருக்கின்றன” இத்தொடரானது எம்மொழி வகையைச் சார்ந்தது?

(A) தனி மொழி
(B) செம்மொழி
(C) தொடர் மொழி
(D) பொது மொழி

Ans - (C) தொடர் மொழி

52. பின்வரும் இலக்கணக்குறிப்புக்கு பொருந்திய சொல்லைத் தேர்ந்தெடுக்க :

உரிச்சொற்றொடர்

(A) நெடுநாவாய் (B) நனி கடிது

(C) நன்னுதல் (D) நின்கேள்

(A) Ans - (B) நனி கடிது

53. உலகத் தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப்பெற்றது - இது எவ்வகையானத் தொடர்?

(A) தன்வினைத் தொடர் (B) பிற வினைத்தொடர்

(C) செய்வினைத் தொடர் (D) செயப்பாட்டு வினைத்தொடர்

Ans - (C) செய்வினைத் தொடர்

54. சொற்களை இரண்டு முதல் ------------------ உறுப்புகளாகப் பகுக்கலாம்?

(A) 3 (B) 4

(C) 5 (D) 6

Ans - (D) 6

55. ஓரெழுத்து தனித்து நின்று பொருள் தருவது?

(A) ஓரெழுத்து ஒரு மொழி (B) சொல்

(C) கிளவி (D) மொழி

Ans - (A) ஓரெழுத்து ஒரு மொழி

56. முதற் பொருளாவது

(A) நிலமும் பொழுதும் (B) அகமும் புறமும்

(C) உயிரும் மெய்யும் (D) திணையும் ஒழுக்கமும்

Ans - (A) நிலமும் பொழுதும்

57. இலக்கணத்தில் பொருளாவது யாது?

(A) செல்வம் (B) ஒழுக்க முறை

(C) அடக்கம் (D) அறிவு

Ans - (B) ஒழுக்க முறை

58. தலைவன் - இச்சொல்லில் ஐகாரம் -------------- மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.

(A) ஒன்றரை (B) ஒரு

(C) அரை (D) இரண்டு

Ans - (B) ஒரு

59. மதில்போர் பற்றிய புறத்திணைகளுக்குரிய புறப்பொருளைத் தேர்க :

(A) வட்கார்மேற் செல்வது, எதிரூன்றல் (B) நிரைகவர்தல், மீட்டல்

(C) எயில்காத்தல், வளைத்தல் (D) அதிரப்பொருவது, செருவென்றுத

Ans - (C) எயில்காத்தல், வளைத்தல்

60. நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை

எவ்வகைச் சொற்றொடரைச் சார்ந்தது?

(A) செய்தித் தொடர் (B) தனிநிலைத்தொடர்

(C) கலவைத் தொடர் (D) தொடர்நிலைத் தொடர்

Ans - (C) கலவைத் தொடர்

61. ‘கால்நகம் கீறிய கோடுகள் வழியே

கங்கையும் சிந்துவும் ஓடிவரும்’

அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு தருக.

(A) உம்மைத் தொகை (B) வினைத்தொகை

(C) எண்ணும்மை (D) இழிவு சிறப்பும்மை

Ans - (C) எண்ணும்மை

62. பொருந்தாத ஒன்றைத் தெரிவு செய்க

(A) நாலடியார் (B) நான்மணிக்கடிகை

(C) பழமொழி (D) கலித்தொகை

Ans - (C) பழமொழி

63. இலக்கணக்குறிப்பறிதல்

பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாதச் சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்

வினைத்தொகை

(A) பொங்குதாமரை (B) பூதரப்புயம்

(C) அலைகடல் (D) அகல்முகில்

(A) Ans - (B) பூதரப்புயம்

64. ஒருமை பன்மை பிழைகளை நீக்குக.

நான் வாங்கிய நூல் இது அல்ல

(A) நான் வாங்கிய நூல் இ∴து அல்ல (B) நான் வாங்கிய நூல் இ∴து அன்று

(C) நான் வாங்கிய நூல் இது அன்று (D) நான் வாங்கின நூல் இது அன்று

Ans - (B) நான் வாங்கிய நூல் இ∴து அன்று

65. நற்றிணை -------------- சிற்றெல்லையும் --------------- பேரெல்லையும் கொண்ட நூல்

(A) 4, 8 (B) 3, 6

(C) 9, 12 (D) 13, 31

Ans – (C) 9, 12

66. முதல் சமய காப்பியம் எது?

(A) மணிமேகலை (B) சிலப்பதிகாரம்

(C) வளையாபதி (D) குண்டலகேசி

Ans - (A) மணிமேகலை

67. பொருத்தமான விடையைத் தேர்வு செய்க.

'தெள்ளுு தமிழ்நடை சின்னஞ்சிறிய

இரண்டடிகள்' – திருக்குறள் குறித்து இப்படிக் கூறியவர் யார்?

(A) திரு.வி.க (B) ஔவையார்

(C) பாரதியார் (D) பாரதிதாசன்

Ans - (D) பாரதிதாசன்

68. வீரமாமுனிவர் பிறந்த நாடு

(A) பாரிசு (B) இத்தாலி

(C) இங்கிலாந்து (D) சுவிச்சர்லாந்து

Ans - (B) இத்தாலி

69. 'இனியவை நாற்பது' நூலின் ஆசிரியர் யார்?

(A) தாயுமானவர் (B) சச்சிதானந்தன்

(C) பூதஞ்சேந்தனார் (D) கபிலர்

Ans - (C) பூதஞ்சேந்தனார்

70. 'அம்மானை' என்பது ----------- விளையாடும் விளையாட்டு

(A) ஆண்கள் (B) பெண்கள்

(C) குழந்தைகள் (D) பெரியவர்கள்

Ans - (B) பெண்கள்

71. முருகனால் சிறையிலிடப்பட்டவன்

(A) நான்முகன் (B) சிவன்

(C) திருமால் (D) இந்திரன்

Ans - (A) நான்முகன்

72. திருக்குறள் ------------ நூல்களுள் ஒன்று

(A) பதினெண் கீழ்க்கணக்கு (B) பத்துப்பாட்டு

(C) எட்டுத்தொகை (D) பக்தி நூல்

Ans - (A) பதினெண் கீழக்கணக்கு

73. குறிஞ்சிப்பாட்டு என்னும் நூலில் எத்தனை வகையான பூக்களின் பெயர்கள் உள்ளன?

(A) 79 (B) 99

(C) 119 (D) 9

Ans - (B) 99

74. ‘மூவருலா’ எந்த மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்டது?

(A) சேரர் (B) சோழர்

(C) பாண்டியர் (D) பல்லவர்

Ans - (B) சோழர்

75. ‘வளன்’ என்னும் பெயரால் அழைக்கப்பெறுபவர்

(A) சூசை (B) பீட்டர்

(C) டேவிட் (D) சேவியர்

Ans - (A) சூசை

76. நூலின் 97 வெண்பாவிலும் மனநோய் போக்கும் 5 கருத்துகள் கொண்டது

(A) மலைபடுகடாம் (B) சிறுபஞ்சமூலம்

(C) ஏலாதி (D) திரிகடுகம்

Ans - (B) சிறுபஞ்சமூலம்எ

77. களிற்றியானை நிரை, மணிமிடைபவளம், நித்திலக்கோவை என 3 பகுதிகளை உடைய நூல்

(A) புறநானூறு (B) அகநானூறு

(C) பரிபாடல் (D) பதிற்றுப்பத்து

Ans - (B) அகநானூறு

78. ‘நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று’ என்று தலைவி தலைவன் மீதான நட்பை வியந்து பாடுவதாய் அமைந்த பாடலின் நூல்

(A) நற்றிணை (B) ஐங்குறுநூறு

(C) குறுந்தொகை (D) அகநானூறு

Ans - (C) குறுந்தொகை

79. ‘கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம்’ எனப் போற்றப்படுவது

(A) தேம்பாவணி (B) இரட்சண்ய யாத்ரீகம்

(C) இரட்சண்ய மனோகரம் (D) கிறித்துவின் அருள்வேட்டல்

Ans - (A) தேம்பாவணி

80. இயேசுபெருமானின் வளர்ப்புத் தந்தை யார்?

(A) அந்தோணியார் (B) சூசை

(C) தாவீது (D) பேதுரு

Ans - (B) சூசை

81. ‘திருத்தொண்டர் புராணம்’ எனும் பெரியபுராணத்துக்கு முதனூலாக அமைந்தது எது?

(A) திருத்தொண்டத்தொகை (B) திருவாசகம்

(C) திருமந்திரம் (D) திருக்கோவையார்

Ans - (A) திருத்தொண்டத்தொகை

82. நாலடி நானூறு என அழைக்கப்படும் நூல் எது?

(A) நான்மணிக்கடிகை (B) நாலடியார்

(C) இன்னா நாற்பது (D) இனியவை நாற்பது

Ans - (B) நாலடியார்

83. கருதிமுதல் - என்ற சொல்லின் பொருள் யாரைக் குறிக்கின்றது?

(A) யூதர் (B) இயேசு நாதர்

(C) சீடர் (D) குற்றவாளி

Ans - (B) இயேசு நாதர்

84. சொல்லின் தோன்றும் குற்றங்கள் எத்தனை?

(A) 3 (B) 4

(C) 6 (D) 10

Ans - (B) 4

85. திருவிளையாடற் புராணத்தை இயற்றியவர்

(A) நக்கீரன் (B) பரஞ்சோதி முனிவர்

(C) தருமி (D) சிவபெருமான்

Ans - (B) பரஞ்சோதி முனிவர்

86. சிறுபஞ்சமூலம் என்ற நூலில் கடவுள் வாழத்துடன் ------------ வெண்பாக்கள் உள்ளன.

(A) தொண்ணூற்றொன்பது (B) தொண்ணூற்றேழு

(C) தொண்ணூற்றாறு (D) நூற்றெட்டு

Ans - (B) தொண்ணூற்றேழு

87. ‘ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய பருவம் எது?

(A) அம்மானை (B) ஊசல்

(C) சிறுதேர் (D) கழங்கு

Ans - (C) சிறுதேர்

88. ‘நான்’ என்பது நான்காம் வேற்றுமை உருபு பெற்றால் -------- என ஆகும்.

(A) என்னை (B) என்னால்

(C) எனக்கு (D) நின்னை

Ans - (C) எனக்கு

89. பொருந்தாததை எழுதுக.

உ.வே.சா பதிப்பித்த நூல்கள்

(A) உலா (B) கோவை

(C) பிள்ளைத்தமிழ் (D) பரணி

Ans - (C) பிள்ளைத்தமிழ்

90. ‘சாமிநாதன்’ என்று ஆசிரியரால் பெயரிடப்பட்டவர்

(A) அம்பேத்கர் (B) காமராசர்

(B) உ.வே.சா (D) அண்ணா

Ans - (B) உ.வே.சா

91. உ.வே.சாவின் வாழக்கை வரலாறு தொடராக வந்த இதழ்

(A) இந்தியா (B) குயில்

(C) ஆனந்தவிகடன் (D) நவசக்தி

Ans - (C) ஆனந்தவிகடன்

92. தமிழகத்தின் காந்தியடிகள் மேடைப்பேச்சினை மொழிப்பெயர்த்தவர்

(A) மு.வரதராசனார் (B) பெரியார்

(C) திரு.வி.க (D) பேரறிஞர் அண்ணா

Ans - (C) திரு.வி.க

93. திரு.வி.கவின் செய்யுள் நூல்கள்

1. உரிமைவேட்டல் 2 சைவத்திறவு

3 பொருளும் அருளும் 4 கடவுட்காட்சியும் தாயுமானவரும்

(A) 2, 3 – சரி (B) 1, 2 – சரி

(C) 1,3 – சரி (D) நான்கும் சரி

Ans - (C) 1,3 – சரி

94. ‘மரபுக்கவிதையின் வேர்பார்த்தவர் புதுக்கவிதையின் மலர்பார்த்தவர்’ – என்று பாராட்டப்படுபவர்

(A) மு.மேத்தா (B) சிற்பி

(C) அப்துல்ரகுமான் (D) சி.மணி

Ans - (C) அப்துல்ரகுமான்

95. வாணிதாசனுக்கு வழங்கப்பட்ட விருது

(A) கவிஞரேறு (B) புலவரேறு

(C) செவாலியர் (D) பாவலர்மணி

Ans – (C) செவாலியர்

96. எழுத்து என்பதற்கு ஓவியம் எனப் பொருள் - கூறும் நூல்கள்

(A) நற்றிணை, குறுந்தொகை (B) அகநானூறு, புறநானூறு

(C) பரிபாடல், குறுந்தொகை (D) குறுந்தொகை, புறநானூறு

Ans - (C) பரிபாடல், குறுந்தொகை

97. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

(A) திராவிட > திரவிட > திரமிள > தமிழ் B) திராவிட > திரமிள > திரவிட > தமிழ்

(C) தமிழ் > திரமிள > திரவிட > திராவிட (D) தமிழ் > திராவிட > திரமிள > திரவிட

Ans - (C) தமிழ் > திரமிள > திரவிட > திராவிட

98. சரியான விடையை எழுதுக.

நடுத்திராவிட மொழிகள் யாவை?

(A) கதபா, பெங்கோ, கோய (B) தோடா, கோத்தா, கொரகா

(C) மால்தோ, குரூக், பிராகுய் (D) கோத்தா, கூவி, மால்தோ

Ans - (A) கதபா, பெங்கோ, கோய

99. கோடிட்ட இடங்களை நிரப்புக.

இராணி மங்கம்மாள் கட்டிய அன்னச்சத்திரம் உள்ள இடம் ------------------

(A) தஞ்சை (B) மதுரை

(C)கோவை (D) திருச்சி

Ans - (B) மதுரை

100. ஈகைச் சிகரத்தின் உச்சியில் நின்றவர்

(A) அம்பேத்கர் (B) பெரியார்

(C) அண்ணா (D) காந்தியடிகள்

Ans -(D) காந்தியடிகள்

Winmeen